# ஆத்ம ஜோதி



சிவனடிபாதம்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்

| சோதி 8 | மன்மத௵ மார்கழி 1-ந்௳ (16-12-55) | சுடர் 2 |
|---|---|---|


## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னைப் பழம் பொருளே | 33 |
| 2 | எல்லாம் சிவமயம் | 34 |
| 3 | இரு அற்புத நிகழ்ச்சிகள் | 35 |
| 4 | உயர்ந்தோரும் மக்களும் | 37 |
| 5 | சமய உணர்விலே புது வளர்ச்சி | 39 |
| 6 | ஸ்ரீகதிரைமணிமாலை | 41 |
| 7 | மகாபாரதம் | 43 |
| 8 | திருமுறைக் காட்சிகள் | 46 |
| 9 | திருக்கார்த்திகைத் திருவிளக்கு | 50 |
| 10 | பெரியோரின் உள்ளம் | 55 |
| 11 | நானும் எனது குருநாதரும் | 57 |
| 12 | அன்னையி.ன வெள்ளிவிழா | 60 |
| 13 | ஹரிஜன மாணவர் சகாயநிதி | 62 |
| 14 | நாமமகிமை | 64 |



## ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75. வருட சந்தா ரூ. 3. தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்

*60, டில் பிளேஸ், கொள்ளுப்பிட்டி, கொழும்பு*

பதிப்பாசிரியர்:– நா. முத்தையா

*ஆத்ம ஜோதி நிலையம் நாவலப்பிட்டி [சிலோன்]*

ஓம்



# முன்னைப் பழம் பொருளே.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீர் அடியோம் [வோம்
உன் அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்கா
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்
என்னகுறையும் இலோம்ஏல் ஓர் எம்பாவாய்

(திருவாசகம்)

பொருள்:- எல்லாவற்றுக்கும் முந்தியதாகிய பழம் பொருளுக்கும் முந்தியதாகிய பழம் பொருளே! பின்னையதாகிய புதுப்பொருளுக்கும் மறுபடியும் அப்படிப்பட்ட புதியவனே! உன்னை இறைவனாகப்பெற்ற உன்னுடைய சிறப்பையுடைய அடியோம் உன் சம்பந்தத்தால் உன்னுடைய மெய்யடியார்களுடைய பாதங்களை வணங்குவோம். அவ்விதம் வணங்கியபடியே அவர்களுடைய பக்கத்தில் இருப்போம். அவர்களே எங்களுடைய கணவர்கள் ஆவர்: அவர்கள் விரும்பிச்சொன்ன வண்ணமே நாங்கள் அடியாராய்ப்பணி செய்யக்கடவோம்; எம் இறைவனே! எங்களுக்கு இந்தவிதமாகக் கிருபை செய்வீராகில் எந்தக்குறையையும்உடையோம் அல்லோம்.

# எல்லாம் சிவமயம்.

இராச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அவரவர் பொறுப்புக்கும் அந்தஸ்துக்கும் ஏற்ப வண்டி வாகனங்களை உடையவராகின்றனர். இறையவரது குடும்பத்தில் அமைந்த வாகனங்களும் அங்ஙனம் முற்றும் பொருத்தமானவைகள். தலைவனது தகைமைக்கும், பொறுப்புக்கும், அமைதிக்கும் ஏற்ப அவருக்கு ரிஷபவாகனம்: தாய் பராசக்தியின் பராக்கிரமத்திற்கு ஏற்ப அவளுக்கு சிங்கம். முருகனது அழகுக்கு ஒப்ப அவனுக்கு மயில். மூத்தவனது அறிவு எதையும் துருவி ஆராய வல்லது என்பதற்கு அறிகுறி எதையும் பொத்துத் துளைக்கிற எலி—இங்ஙனம் ஊர்திகள் ஏற்பட்டிருக்கின்றன. எல்லா உயிர்களுக்கும் அந்தர்யாமியாயிருந்து இறைவன் அவர்களை ஆட்டுவிக்கிறான் என்பதே வாகனம் என்பதன் உட்கருத்து. உண்மையில் உயிர்கள் எல்லாம் அவருக்கு வாகனம். பாம்பு, பறவை உக்கிரமான மிருகம், சாந்தமான மிருகம், சிறிய உயிர், பெரிய உயிர் எல்லாம் அவருக்கு வாகனம். ஜீவர்களைச் சிவனோடு இணைத்துக் காணுமளவு கேடு இல்லை என்ற கோட்பாட்டையும் அவரது குடும்பம் விளக்குகிறது. அக்கோட்பாட்டின் உயர்வைத் தம் தலைமுடியில் அவர் வைத்துள்ளார். சந்திரனுக்கும் பாம்புக்கும் என்றும் பகை. ராகு, கேது என்ற சர்ப்பங்கள் சந்திர சூரியரை விழுங்கக் காத்துக்கொண்டிருக்கின்றன என்பது ஐதிகம். ஆனால் சிவனாரது சடாமுடியில் சர்ப்பமும் சந்திரனும் பகைமை இழந்து பண்புற்றிருக்கின்றனர். அவர் மயமாய்க் காணுங்கால் பாம்பும் பயத்துக்குரியதல்ல. வேறுபாடுகள் எல்லாம் அவரது வெவ்வேறு விளையாட்டுக்களாய் அமைந்து விடுகின்றன. சிவம் என்னும் சொல்லுக்குப் பொருள் மங்களம். உலகைச் சிவத்துக்கு அன்னியமாகக் காணுமிடத்து அது அமங்கலம். அதைச் சிவமயமாய்க் காணுமிடத்தே அது மங்களகரமானது எல்லாம் சிவமயம். இவ்வுண்மையை அறிந்து அதற்கு ஒப்ப ஒழுகுபவர்க்கு வாழ்க்கை நலன் அனைத்தையும் தரவல்லது.

*சுவாமி சித்பவானந்தர்*

# இரு அற்புத நிகழ்ச்சிகள்.

(ஆசிரியர்)

இரண்டு மாசங்கட்குமுன் திருக்கோணமலையில், பழைய சிவாலயத்தின் தீர்த்தக்கரைப் படிகளும், தூண்களும், வேறுசில அடையாளங்களும் கண்டெடுக்கப்பட்டவிதம், 1894ம் ஆண்டு ஆனி மாசம் முதலாந் தேதியன்று திருவாளர் சி. த. மு. பசுபதிச் செட்டியார் முதலாய சைவப்பெருமக்களால் மாதோட்டத்தில் பழைய திருக்கேதீச்சர ஆலயக் கிணறிருந்த இடம் கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்ச்சியை நினைவூட்டுகின்றது. திருக்கோணமலையில் புதிய ஆலயம் அமைக்குந் தொண்டில் ஈடுபட்டுள்ள சைவ அபிமானிகள் பலரின் உள்ளத்தில், அக்கட்டிடத்திற்கெனத் தாங்கள் தெரிந்தெடுத்த இடம் பழைய கோயிலிருந்த எல்லைக்குள்தானா என்பது குறித்து இதுவரையில் இருந்து வந்த சந்தேகம் நீங்கிவிட்டது.

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை நிறுவப்பட்டு, வேலைத்திட்டம் ஆலோசிக்கப்பட்டபோது, அதின் நிர்வாகிகள் சிலரின் உள்ளத்திலும் இதேவித சந்தேகம் எழுந்தது. அதாவது, புதிய பெரிய ஆலயத்தையும் சுற்றுப்பிரகாரக் கோயில்களையும் இப்போதுள்ள (1903ம் ஆண்டில் பிரதிஷ்டை செய்யப்பட்டு நகரத்தார் மேற்பார்வையில் வழிபாடு நடந்துவந்துள்ள) சிறிய ஆலயத்தைச் சுற்றியே அமைப்பதா என்ற பிரச்சனை வந்தது. அச் சந்தேகத்தை நிவிர்த்திசெய்யும்பொருட்டுபுதைபொருளாராய்ச்சிப் பகுதியின்உதவி கோரப்பட்டது. அப்பகுதியினரின் தீவிர நன்முயற்சியின் பயனாக பழைய தேவி ஆலயம் இருந்து அழிந்த இடத்திலேயே புதிய ஆலயம் எழுப்பிய உண்மை நிரூபிக்கப்பட்டது. இவ்வித சம்பவங்கள் இறைவன் திருவருளால், அது நிச்சயிக்கும் ஓர் குறிப்பிட்ட காலத்தில் நடைபெறும் அற்புத நிகழ்ச்சிகளாகும். அத்திருவருளின் அளப்பெருங்கருணையைப் பாராட்டி, அதற்கிணங்கப் பணிசெய்வதே இலங்கைவாழ் சைவர்களின் கடமையாகும்.

தமிழ்மாலை பெற்ற இவ்விருதலங்களும் பரமசிவன் சுயம்புவாய் காதலித்துறை கோயில்கள் என்பதில் அணுவேனுஞ் சந்தே

கங்கொள்ள இனிக் காரணமில்லை. இராவணனின் மாமனும், அவனது மூதாதையர்களும் வழிபட்ட சிவஸ்தலங்கள் இவை. தொன்று தொண்டு இன்றுவரைக்கு இந்நாட்டிற்கு அவை ஓர் தனிச்சிறப்பைக் கொடுத்து வருகின்றன. அந்நியரின் அட்டூழியங்களால் ஆலயங்கள் மண்ணோடு மண்ணாக, கடலோடு கடலாக, மறைந்தகாலத்திலுங்கூட, அவற்றின் சக்தி ஒழிந்துவிடவில்லை; அவ்யக்தமாய் மெய்யடியார் உள்ளங்களில் கதிர் வீசிக்கொண்டேயிருந்துள்ளது.

இவ்விரண்டு தலங்களும் "ஈச்சரம்" என அழைக்கப்படுவது மிகவும் முக்கியமான விஷயம். தமிழ்நாட்டில் சில ஊர்கள் 'ஈச்சரம்' என அழைக்கப்படுவது உண்மையே. ஆனால் அவையனைத்தும் காலத்தால் மிகவும் பிந்தியவை. 'ஈச்சரம்' என்றால் ஈசன் உறைவிடம் என்பது கருத்து. "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்பது நமது ஆன்றோர் வாக்கு. அதில் தமிழனின் நாகரீகமும் சமயப் பண்பாடும் அருமையாக அமைந்துள்ளன. அதைத் தமிழினம் மறக்கத்தொடங்கிய காலத்தில் "திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்" என்று அப்பர் சுவாமிகள் பாடியுள்ள அழகையும் உற்று நோக்குக. இராமபிரான் இலங்கையிலிருந்து தாய்நாடு திரும்பும்போது சீதாதேவியை மாத்திரம் அழைத்துச் செல்லவில்லை; 'ஈச்சரத்தையும் உள்ளத்தில் கொண்டுசென்றார். தாய்நாட்டின் தென் திசையில் இறங்கியதும் அவர் செய்த முதல் தெய்வப்பணி இராமேச்சரத்தை அமைத்ததாகும். அவர் காட்டிய வழியைப் பின்பற்றி நாகமன்னர்கள் நாகேச்சரம்' அமைத்தனரெனலாம். அந்த வழக்கம் பின்னர் பல்லவர்காலத்திலும் சோழர் காலத்திலும் தொடர்ந்து வந்ததற்கு 'பல்லவனீச்சரம்' 'இராச ரசசேச்சரம்' போதிய சான்றுகளாக மிளிர்கின்றன.

இவ்விதம் அளப்பரும் பழமையும் பெருமையும் பொருந்திய திருக்கோணமலையில், நிகழும் மன்மத வருஷம் மாசி மாதம் 14-ந் தேதி [26-2-56] மஹாமக புண்ணிய தீர்த்தத்தைக் கொண்டாட அந்த ஆலயத் திருப்பணிச் சபையினர் எண்ணியிருப்பதாக அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம். மாசிமாச மக நட்சத்திரத்தில், வியாழ பகவான் சிங்கராசியில் அமையும் புண்ணிய நாள் இது: பன்னிரண்டு வருடத்திற்கொருமுறை கும்பகோணத்தில் நடைபெறும் இத்தீர்த்தவிழா 'மாமாங்கம்' என அழைக்கப்படும். அது வட—

# உயர்ந்தோரும் மக்களும்

*(சுவாமி சத்தியானந்தர்)*

உலகம் அலை இயல்பை உடையது: மாகடலிலே அலைகள் எழுவதும் உயர்வதும் விழுவதும்போல் ஜகம் தோன்றி நிலைத்து ஒடுங்குகின்றது. மீண்டும் மீண்டும் இது நடைபெற்று வருகின்றது. உலகிற்குரியது அதன் உறுப்புகளுக்குமுண்டு, அண்டத்திற்கு எது உளதோ அது பிண்டத்திற்கும் உளது. எழுச்சி, உயர்ச்சி, வீழ்ச்சி என்ற சுழல் பௌதிக, மானசிக, நைதிக ஆத்மீக மண்டலங்கள் அனைத்திற்குமுண்டு. மனித சரித்திரத்தைக் நற்குங்கால், சமுதாயத்தைத் தொடர்ந்து சமுதாயம் எழுந்ததையும் உயர்ந்ததையும் வீழ்ந்ததையும் பிறகு வேறு சமுதாயம் எழுவதையும் நாம்அறிகின்றோம். இன்னும் ஒரு சமுதாயத்தின் ஒவ்வோர் உயர்ச்சிகளிலும் பெருந்தகையார் ஒருவர் இருந்திருப்பதையும் நாம் சரித்திர வாயிலாக அறிகின்றோம். "உலகம் உயர்ந்தோர் மாட்டே" என்ற தொல்காப்பியச் சூத்திரம் இவ்வுண்மையைக் கொண்டதே. உயர்ந்தோரின் ஆற்றலினாலே அவர்கள் தோன்றிய சமுதாயம் மேம்பாடு பெறுகின்றது. அவர் தம் பூதவுடலை நீத்தபின்னரும் அவருடைய சத்தியானது சமுதாயத்தின் ஆக்கத்திற்காக வேலை செய்கின்றது. இத்தகைய மகாபுருஷர்கள், மாபெருந் தலைவர்கள், ஆதர்ஸீக ஆதிமனிதர்கள், எங்கெங்கே எவ்வெக்காலததிலே ஆவசியகமோ ஆங்காங்கே அவ்வக்காலத்திலே தோன்றுவதுண்டு. மோஸேஸ், ஜொரோ, ஆஸ்தர், லா-வொத்-ஜு, கொங்-புத்-சூ, கௌதம புத்தர், சோக்கிராத்திஸ் பிலாத்தோ, யேசுபெருமான், முகம்மது நபி, எமர்சன், கார்ல் மார்க்ஸ், திருவள்ளுவர், நாவுக்கர், சங்கரர், ராமானுஜர், தயானந்தர், பகவான் ராமகிருஷ்ணர், மகாத்மா காந்தி அடிகள் எல்லோரும்இவ்வுயர்ந்தோர் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களே.

---

*முற்பக்கத் தொடர்ச்சி*

நாட்டில் நிகழும் கும்பமேளாபோன்ற புனிதமும் சிறப்பும் உடைத்து "குரை கடலோத நித்திலங்கொழிக்குங் கோணமாமலையில் மேலே குறிப்பிட்ட புண்ணிய வேலையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி, புனித நீர் ஆடி, ஈசன் புகழ் பாடும் காட்சியைக் கண்டின்புற அப்பெருமான் திருவருள் பாலிப்பாராக

தீர்க்கதரிசிகள் தோன்றி தம் சீரிய வாழ்வினாலும் அருஞ் செயல்களினாலும் தன்னலமொழிந்த தொண்டுகளினாலும், அமுத வாசகங்களினாலும் மக்கள் மேலோங்கும் வழியை—பூரணமடையும் மார்க்கத்தை-காட்டிவிட்டு மறைந்துவிடுகிறார்கள். பிறகு காலஞ் செல்லச் செல்ல, அவ்வுத்தமர்களின் வாழ்க்கை, செயல்கள் ஆகியவற்றைப் பற்றியும் சுற்றியும் சிற்றறிவு படைத்த மாந்தர் பலப்பல கற்பனை வலைகளைப் பின்னிவிடுவார்கள். அவ்வலைப் பின்னல்களுக்குக் காவிய ஓவிய சிற்பக்கலைஞர் கலையுருக்கொடுத்து அதை நிலைப்பித்துவிடுவார்கள். படிப்புவல்லுநர் அம்மகான்களின் உபதேசங்களைத் தம் கருத்துக்கு இயைந்தவாறு மாற்றியும் குறித்தும் சேர்த்தும் விடுவதுண்டு. இன்னும், மக்கள் மீது தம் ஆதிக்கத்தைச் செலுத்த முனையும் கூட்டத்தார் அம்மகான்களினது புனித வாழ்க்கையிலும் பொன் மொழிகளிலும் தாம் விரும்பும் கருத்துக்களை இடையிற் செருகியும் (Interpolations) விடுவார்கள். இந்நாட்களிலே நம் வியாபாரிகள் மகான்களின் பெயர்களையும் உருவங்களையும் வணிகக் குறிகளாகக் கையாளுகிறார்கள். இவ் இழிய வழக்கம் வேறு சமுதாயத்திடம் கிடையாது.

இவ்வாறு, காலாகாலத்திலே பெரியார்களது உண்மைச் சிறப்புகளை மக்கள் கைவிட்டு, அவர்களது பெயரினாலே பலப்பல போலி ஐதீகங்களைக் கைக்கொள்வது இயல்பு. ஆராய்ச்சி, பகுத்தறிவு புத்திநுட்பம் இவை படைத்த சமுதாயங்களிலே போலி ஐதீகங்கள் வேரூன்றுவது அரிது. ஆனால் அவை அற்ற அல்லது குறைந்த சமுதாயங்களிலோ போலி ஐதீகங்களும் மூட நம்பிக்கையும் எளிதாக வேரூன்றி விடும்.

பாரதநாட்டின் செல்வங்கள் அநேகம். அச் செல்வங்களை நமக்குத் தேடியும் திரட்டியும் தந்துள்ள உத்தமர்கள் எண்ணிறந்தோர் நமது சமுதாயத்தின் படுவீழ்ச்சியினாலும், மக்களின் பகுத்றிவின்மையினாலும் ஆராய்ச்சிக் குறைவினாலும், கால வகைக்கொப்ப பழையனவற்றைக் கழித்து புதியனவற்றைக் கையாளாததினாலும், நம் பொன்றூச் செல்வங்களும் நம் மகா புருஷர் சரிதைகளும் மாசுற்று மங்கிக் கிடக்கின்றன. நம் மக்களில் பெரும்பாலோர் இக்காலை அறிந்திருப்பதும் கொண்டாடுவதும் வெறும் ஐதீகங்

# சமய உணர்விலே புது வளர்ச்சி

(தியாகபூமி)

நம் சைவ சமய மடாலயங்கள் ஹிந்து மதத்தை பரப்புவதில் முனைந்துள்ளது மிகவும் வரவேற்கத்தக்கது. தற்கால நிலையை உணர்ந்திருப்பது ஒருபுறமிருக்க, மடாதிபதிகள் தங்களுடைய இயற்கை நிலையை உணர்ந்து வேலைசெய்ய முன்வந்திருப்பது மிகவும் பொருத்தமும் நியாயமுமாகும். மடங்கள் ஏற்படுத்தப்பட்டது மதபிரசாரம் செய்வதற்கே. தேவையான பொழுதெல்லாம், தேவையான முறையில் எல்லாச்சமயத்திற்கும்பாதுகாப்பு கொடுத்தும் அதனை வளர்த்தும் வருவதற்காகத்தான் மடங்கள் ஏற்படுத்தப்பட்டன. நல்ல உயர்ந்த எண்ணத்துடன் அவைகள் அமைக்கப்பட்டன. எப்பொழுதும் நம்மை சமய உணர்ச்சியில் ஈடுபடுத்தி அதனைமறக்காது இருக்கும்படி செய்ய மடங்கள் சமயக் களஞ்சியங்களாகவும், நிலையங்களாகவும். தளங்களாகவும் அமைந்தன. நாட்டின் ஒற்றுமையையும் சமய வாழ்க்கையையும் வற்புறுத்தவே ஆதிசங்கரர் நாட்டின் நாலு திக்குகளிலும் மடங்களை ஸ்தாபித்தார். எவ்வாறு அறைநாட்டை கஷ்டகாலங்களில் காப்பாற்றி, மக்களை பாதுகாத்தது என்பதற்கு விஜய நகரசாம்ராஜயம் ஷ்தாபிக்கப்பட்டதே சான்று. வித்யாரண்யர் தன்னுடைய துறவற வாழ்க்கையிலிருந்து வெளிவந்து ஹிந்து மதம். தர்மம் இவைகளுக்காக எவ்வாறு ஒரு ஹிந்து சாம்ராஜ்யம் தேவை என்று உணர்ந்து அதனை ஸ்தாபித்தார் என்பது சரித்திரப்பிரசித்தம். அதுவேமடங்கள் ஸ்தாபிக்கப்பட்டதின்கருத்து பொருத்தம். அதனை மறுமுறையும் உணர்ந்து நமது மடாதிபதிகள்

---

முற்பக்கத்தொடர்ச்சி

களேயாகும். இக்காலத்திலே தயாநந்தர், விவேகானந்தர், சுப்பிரமணிய பாரதியார், சுத்தானந்தர், மகாத்மாகாந்தி அடிகள் போன்ற பெரியார்கள் நம் செல்வங்கள் மீது படைத்துள்ள மாசு மறுக்களைப் போக்க ஒரளவு சீரிய முயற்சிகள் செய்துள்ளனர். நம் பழம் சீர்மைகளுடன் இக்காலச் சிறப்புகளையும் இணைத்து நாம் உய்வதற்கு வழிகாட்டியுள்ளனர். காலப்போக்கிலே உலகம் மாறுகின்றது மக்கள் கருத்துக்கள் மாறுகின்றன. ஒவ்வொருமாறுதலும் "உள்ளது சிறத்தல்" என்ற நியதியிலே முன்னேக்கிச் செல்லும் ஒருபடியாம் இதே ஆன்றோர் முடிவு.

நமக்கு தலைமை தாங்க வந்துள்ளது நம்முடைய பாக்யம். நாம் அவர் களை வணங்குகிறோம்.

சில ஆண்டுகளுக்குமுன் சென்னை தியாகராய நகரில் ஒரு பெரும் வீடு ஹிந்துமத பிரசாரத்திற்காக ஒரு மடாதிபதியால் வாங் கிவிடப்பட்டு அங்கு சமய பிரசாரம் நடைபெறுவது நாம் அனைவ ரும் உணர்ந்ததே. சென்றஇதழில்கூட அதன்கூட்டம் ஒன்றில் நம் ஜனாதிபதி கலந்து கொண்டதை குறிப்பிட்டிருந்தோம். இவ்வாரம் தென்கோடி நாகர்கோவிலில் மற்றொரு மடாதிபதி [திருவாவடு துறை] ஏராளமான இடம், கட்டடம் கட்டுவதற்கு கொடுத்திருப் பதைப் படித்து மகிழ்ச்சியுறுகிறோம். அந்த இடத்தில் ஹிந்து மதத் திற்காக அரும்பணியாற்றிவரும் மகா வித்வான் ஆறுமுக நாவலர் தமது சொந்தத்தில் ஏராளமான பொருள் சிலவு செய்து கட்டிடம் கட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. அதன் திறப்பு விழாவை மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனம் சோமசுந்தர தேசிக பரமாச்சாரியார் நடத்தி யருளினார்கள். பெருங்குளம் செங்கோல் மடம் ஆதீனம் ஹிந்து சமயக்கொடியை ஏற்றுவித்தார்கள். நாற்புறமும் சமயமும் சமயாச்சார்யர்களும் இனி ஹிந்து மதத்திற்கும் தர்மத்திற்கும் தாழ்வி ல்லை என்று சொல்லத்தோன்றுகிறது.

மற்றொரு முக்கிய விஷயம் குறிப்பிடத்தக்கது. ஹிந்துமதப் பிரசாரகர்கள் பயிற்சிபெற ஒரு கல்லூரி கட்டுவதாய் ஏற்பாடாகி யுள்ளது. அக் கல்லூரிக்கு அடிப்படைக் கல்நாட்டியது திருகொ ச்சி அரச பிரமுகர். அவர்கள் கலந்து கொண்டது பலவிதத்திலும் பொருத்தம், பண்டைக்காலத்தை அது நினைவூட்டுகிறது. எவ்வாறு நம் அரசர்கள் நம் மதத்தில் ஆழ்ந்த பற்றுதல் உள்ளவர்களாக அதனைப் பேணி வளர்த்தார்கள் என்று. நமது அரசாங்கம் மதச்சார் பற்ற தன்மையுடையதாய் ஹிந்து மதத்திற்கு ஆக்கம் கொடுக்க முடியாத தற்கால நிலையில் அரசர்கள் அந்தப் பணிக்காக முன்வந் துள்ளது மிகவும் போற்றத்தக்கது. மற்றும் வீரசிவம் முத்துராமலி ங்கத் தேவர் முதலிய பல பெரியோர்கள் அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அரசரும், துறவிகளும், அறிவாளிகளும், மக்களும் கலந்துகொண்டு நடைபெறும் பெருமுயற்சி வெற்றியடையும்என் பதில் எள்ளளவும் ஐயமில்லை. எல்லா தரப்பட்டவர்களும் மதத்தி லும் அறத்திலும் ஆர்வம் கொண்டவர்களாய் வாழ்ந்து வந்துள்

(கவர் மூன்றும் பக்கம் பார்க்கவும்)



# ஸ்ரீ கதிரை மணிமாலை

"பரமஹம்ஸதாஸன்"

சாமித் தன்மை யுலகமெலாம்
சார்ந்தே யுள்ள தென்பதனை,
சாமித் வம்பூ ரணம்பெருநின்
தலமாம் கதிரைப் பதியினிலே
"சாமீ சாமி"யென் றனைவருமே
சாற்றக் கேட்டு மகிழ்ந்தேன்என்
சாமி! அதைவிட் டகன்றவுடன்
சாமிச் சார்பை மறப்பதுமேன்?

புனத்தில் வளரும் கலைமானைப்
பிடிக்கப் புனைந்த பலவேடா!
தினைக்குள் தேனைப் பிசைந்தூட்டத்
தின்றே விக்கல் காட்டிபுனற்
சுனைக்குள் வள்ளி கரம்பற்றிச்
சொக்கிக் கிடந்த துரையே!என்
மனத்தைப் பிடித்துச் சுகம்பெறுவோர்
வழிசொல் கதிரை மன்னவனே!

பக்தர் இறைஞ்சித் தொழமகிழ்ந்து
பாவச் சுமையை நீருக்கும்
சக்தி வடிவேற் றனிக்குமரா!
தபியேன் அகந்தை யிருள்கெடவுன்
சித்த முவந்தோர் கருணைவிதி
சிந்தாய்! சிந்தா குலந்தீர்க்கும்
அத்திக் கிளையோய்! நிர்மலமாய்
அகண்ட கதிரை அருள்வடிவே!

ஆடும் பெருமான் இடப்பாகத்
தம்மை மகிழக் கனிந்துவிளை
யாடித் தவழ்ந்து வரும்பிள்ளை
யமுதே! அபலை யெனினுமுனைத்
தேடி யலைந்துன் பதமடைந்த
தீனர்க் கிரங்க மனமிலையோ?
கோடிக் கணக்கில் அடியவரைக்
கூட்டும் கதிரைக் கோமானே!

எளியார்க் கிரங்க அவரவர்தம்
இதயங் களிக்கும் எழில்வடிவில்
தெளிவாய்ப் பலபே ருருக்கொண்ட
தேவா! கதிரைச் செழுங்கனியே!
உளியாற் செதுக்கி உருவளிக்க
ஒண்ணுப் பொருளே நானென்று
ஒளியா துண்மை யடியார்கட்
குணர்த்தற் கோ,இங் குருவற்ருய்?

அமரா திபனே! கொடியவர்கட்
கஞ்சு முகத்தோய்! அகமுருகித்
தமரா யடைந்தோர்க் காறுமுகத்
தந்தாய்! தமியேன் பிழைபொறுத்துன்
கமலப் போதில் அணைத்தருளாய்
கருணைக் கடலே, குருமணியே!
இமவான் மகள்தந் திருங்கனியே,
எழிலார் கதிரை யெம்மானே!

அருளால் உலகைத் தாங்கிவரும்
அப்பன் மகிழப், பிரணவத்தைக்
குருவா யமர்ந்து அருள்புரிந்த
குமரா! முந்தைக் கொடியவினை
இருளிற் கிடந்து கரைகாணு
தேங்கும் அபலை உய்யவருட்
குருவாய் வந்தா லாகாதோ!
குறமா தணையும் கதிர்க்குன்றே!

வெருண்ட புலனே சுக்காணுய்
வெய்ய அகந்தைத் துடுப்பீந்து
திரண்ட வினைப்புல் லுடற்படகைச்
செலுத்தக் கொடிய மனமீந்து
இருண்ட வாழ்வுக் கடலிலெனை
விடுத்தால் கடத்தல் எவ்வாறே?
மருண்ட வள்ளிப் புனமானை
மருவும் கதிரைப் பெருமானே!

[தொடரும்]

# மகா பாரதம்.

(டாக்டர். டி. எ. பி. மஹாதேவன்)

[சூழ்ச்சிகளும் சண்டைகளும் நிரம்பிய வெறும் கதையல்ல மகாபாரதம். நன்மை தீமை இவைகளிடையே போராட்டம். முடிவில் நன்மையின் இறுதி வெற்றி. இதன் உருவகக்கதையே அது.]

அறம், பொருள், இன்பம் வீடென்ற வாழ்க்கையின் நால்வகைக்குறிக்கோளிலே, பொருளும்இன்பமும் இலௌகிக வாழ்க்கையையும், அறம், நல்வாழ்க்கை என்னும் அம்சத்தையும், வீடு, நிரந்தர வாழ்க்கையையும் குறிக்கின்றது. பொருள், இன்பம் இவ்விரண்டையுந் தேடுவதில் மனிதனுக்கும் மிருகத்திற்கும் சிறிதளவு வித்தியாசமே காணப்படுகிறது. நல்வாழ்க்கையை தழுவி நிற்கும் போதுதான் மனிதன் உண்மையிலேயே மனிதனாக விளங்குகின்றான். எல்லையற்ற நிரந்தர வாழ்க்கையை அடையும் பொருட்டு இந்நல்வாழ்க்கையை ஒருசாதனமாக உபயோகிக்கும்போதுதான் அவன் தெய்வீகத் தன்மை பெறுகின்றான்.

மகாபாரதம் ஹிந்து சாஸ்திரங்களிடையே விசேட இடம்பெற்றுள்ளது. ஏனெனில் மனிதனைக்குறித்த சகல விஷயங்களைப்பற்றியும் தன்னுள் அடக்கிடும் அளவிற்கு பிரமாண்டமானதாக உள்ளது. அது கவனித்திடாத பெரும் பிரச்சனை ஒன்றும் இல்லை. அது பதிலிறுத்திடாத விடயம் ஒன்றுமில்லை.

வாழ்க்கை நியதிகளை மீறாமல் இலௌகிக மேன்மைக்காக ஒருவன் எவ்வாறு பாடுபட வேண்டுமென்றோ அன்றி இன்பங்களைப் பெற்றிடலாம் என்றோ இம்மாபெரும் இலக்கியத்தின் போதனைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம், குடும்ப சமூகவாழ்க்கை குறித்தும் தொழில்கள் பல்வேறு வகுப்பிடையே தொடர்பு பற்றியும் அரசியல் தந்திரம் யுத்த நியதி குறித்தும் விவரங்கள் அதில் உள்ளன. ஆத்மார்த்த கட்டுப்பாடு, துக்கத்தை வெல்வதற்கான வழிகள் மெய்ஞ்ஞான உண்மைகள், இவைகளெல்லாம்கூட மகா பாரதத்தில் போதிக்கப்படுகின்றன, அம்மாபெரும் இலக்கியமும் கூறுகின்ற மாதிரி வாழ்க்கையின் நால்வகைக் குறிக்கோள்கள்பற்றி

வேறெங்குங் காணப்படுபவைகளை இங்கு ஒருவன் காணலாம், இங்குகாணப்படாதவை வேறெங்குங் காணப்படாதவை,

சீரிய வாழ்க்கையாம் தருமம் என்னும் நடுவகக்கருத்தைச்சுற்றித்தான் மற்றவை எல்லாம் சுழலுகின்றன. தர்மபுத்திரன் என்பது இக்கதையின் முக்கிய கதாபாத்திரராகிய யுதிஷ்டிரருக்குச் சிறப்பாக அமைந்த பெயர், தர்மத்தை பூண்டு பேணி நடப்பதில் மிக்சிறந்தவர்களில் ஒருவர் என்பதாக இவர் விவரிக்கப்படுகிறார். ஐந்து பாண்டவ இளவரசர்களும் இக்கதையிலே நல்லவைகளைத் தோற்றுவித்திடும் சக்திகளாக விளங்குகின்றனர்.

ஆசிரியராகத் தோற்றமளித்திடும் சில பெரியோர்கள் தாங்கள் எடுத்துரைத்து விவரிப்பதற்கு தருமத்தையே முக்கிய விஷயமாக எடுத்துக்கொள்கிறார்கள். அதோடு தாங்களும் தர்மசீலராக விளங்குகிறார்கள். விதுரர் தருமத்தின் உண்மையை அறிந்தார். அதை வழுவி நடந்தார், தர்மத்தை அறிந்தவர்களில் மிகஉயர்ந்தவர் என ஸ்ரீ கிருஷ்ணனாலே பீஷ்மர் குறிக்கப்படுகிறார். அப்பேர்ப்பட்டவர் காலனை நோக்கி அம்புப் படுக்கையில் சயனித்திருக்கும்போது யுத்தம் முடிந்தவுடன் யுதிஷ்டிரர் அன்னாரிடமிருந்து ஞானத்தைப் பெறுவதற்கு அனுப்பப்படுகிறார், தர்மமாகவே விளங்குகிறார், ஆண்டவனும் மிகச்சிறந்த அவதாரமுமான ஸ்ரீ கிருஷ்ணர்,

சூழ்ச்சிகளும் சண்டைகளும் நிரம்பிய வெறும் கதையாக மகாபாரதம் கருதப்படக்கூடாது. நன்மை தீமை இவைகளிடையேயான போராட்டத்தினுடையவும், முடிவில் நன்மை இறுதி வெற்றி அடைவதனுடையவுமான உருவகக்கதையாக அதைக் கொள்ளவேண்டும். இம்மாபெரும் யுத்தத்தின் முடிபு அரசியல் வெற்றியல்ல ஆனால், மனிதனிடம் காணப்படும் கீழ்த்தரமானதும், குறுகியவைகளுமானவைகளின் மீது வெற்றியாம், ஆத்ம வெற்றியாகக் கொள்ள வேண்டும்.

மஹாபாரதக் கதையில் ஒருசந்தர்ப்பத்தில் மிக்கஅறிவாளியான பீஷ்மர்கூட உண்மையின் ஒளியைக்காணமுடியவில்லை, துரியோதனனால் உத்தரவிடப்பட்டு, அவனது சகோதரர்களில் ஒருவனான துச்சாதனன், அரச அவைக்குத் திரௌபதியை இழுத்துவந்தான் அவளது மானத்திற்கு இழுக்கு வந்திடக்கூடிய அந்தச் சந்தர்ப்பத்திலே திரௌபதி தன்னைக்காப்பாற்றும்படி பெரியோர்களிடம்வேண

டினுள். பீஷ்மரின் முறை வந்திட்டபோது அவனிடம் தர்மம்மிக்க நுண்ணியதாக உள்ளதால் இப்பிரச்சனையின் உண்மையை என்னுல் நிர்ணயிக்க முடியவில்லை. என ஒப்புக் கொண்டார். எதுசரி, எது தவறு; எது நன்மை, எது தீமை என்பனவற்றை நிச்சயித்திடுவது எவ்வளவு கடினமானது என்பதைக் காட்டிட இம்மாதிரி எத்தனையோ சந்தர்ப்பங்கள் இக்காவியத்திலே எழுகின்றன.

சாஸ்திரத்தின் நோக்கமே, உண்மையை ஒருவன் அறிந்து கொள்ளச்செய்யவே ஒழிய, எவர் மேலும் ஒரு குறிப்பிட்ட நியதியை திணிப்பதற்காக அல்ல. சாஸ்திரம் நினைவூட்டுவதுதான், செய்யச் சொல்வதல்ல. நேர்மையாயிருக்க ஒவ்வொருவனும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். விடுதலைக் குறிக்கோளை நோக்கி ஒருவனை அழைத்துச்செய்வதின் தகுதியைப் பொறுத்துள்ளது ஒவ்வொருகாரியத்தின் நேர்மையும், ஒழுக்கமும்.

ஒருவன் தாழ்குடியிற்பிறந்து உயர்ந்தோனுகலாம்: உயர் குடியிற்பிறந்து அருவருக்கும் குணமுடையோனுகலாம். ஆகவே கவனிக்கப்படவேண்டியது குணமும் ஒழுக்கமுமே அவன் எக்குடியிற் பிறந்தான் என்பதல்ல. ஒழுக்க நியதிக்குட்பட்டு சீலமிகுந்தவனுகவும், கண்யமானவனுகவும், பேன்மை பொருந்தியவனுகவும் இருந்தால்ஒருவன் எக்குடியிற்பிறந்தவனுயிருப்பினும் உயர்குடியிற்பிறந்தோர் நூற்றுவரை மிஞ்சிவிடுவான் என விதுரர் கூறியுள்ளார். ஒழுக்கம் இல்லாதவனுக ஒருவன் இருப்பின், அவனது குடிப்பிறப்பு அவனது மரியாதைக்குரிய சின்னமாகாது என நான் கருதுகிறேன் கீழ்க்குடியிற்பிறந்திருப்பினும் அவனது ஒழுக்கமே சிரேஷ்டமாகிறது என்பதாக விதுரர் கூறியுள்ளார்.

மகா பாரதம் கீழ்க்கண்ட ஒழுக்கங்களை எடுத்துரைக்கின்றது. பொறுத்தல், சகித்தல், அகிம்சை, சமநிலை, உண்மை, நேர்மை, புலனடக்கம், தன்பணி ஆற்றுந்திறமை, மென்மை, செய்யத்தகாததைச் செய்வதில் ஒரு அவமான எண்ணம், சஞ்சலமற்றதன்மை, கீழ்த்தரமின்மை, அவசரத்தை விலக்குதல், திருப்தி மனப்பான்மை நாவினிமை, துன்புறுத்தாதிருத்தல், பொருமையற்றிருத்தல் முதலியன. இவ்வெல்லா குணப்பண்பாடுகளையும் கைக்கொள்ள வேண்டியதான நோக்கம் முழுமையை நோக்கி ஒருவன் முன்னேறவேண்டும் என்பதே.

# திருமுறைக் காட்சிகள் (5)

[முத்து]

## ஈதே எம்தோழி பரிசு

மாதங்களுக்குள் நான் மார்சழியாக இருக்கின்றேன். எனக் கண்ணபிரான் பகவக்கீதையிலே கூறியிருக்கின்றார். மார்கழிமாதத்தைச் வேதர்மாதமாகக் கொண்டாடிவந்தனர் நம் முன்னோர் இன்றும் அது கைக்கொள்ளப்பெற்று வருகின்றது.

நாட்டுக்கும் தமக்கும் நலம் வேண்டிக்கன்னியர்கள் காத்தியாயனிதேவியைக்குறித்து மார்கழிமாதம் முழுவதும் நோன்பு நேர்ற்றல் வழக்கம். மார்கழிமாதம் முப்பத்தொரு நாட்களும் வீட்டு முற்றங்கள் அதிகாலை நான்கு மணிக்கே அழகிய கோலங்களுடன் விளங்குவதைச் சமயப்பண்பாடு பெற்ற குடும்பங்களில் இன்றும் காணலாம் கன்னியர்கள் வைகறையில் துயிலெழுந்து, தோழியர்களையும் துயிலெழுப்பி, ஆண்டவன் புகழ்பாடி நீராடச்செல்லுதல் மரபு. இதனைக்கண்ணுற்றார். மணிவாசகப்பெருந்தகை, எம்மையெல்லாம் கரு

முற்பக்கத்தொடர்ச்சி

மிருகத்தன்மையை அடக்கி புனிதத்தன்மையை வளர்த்திட விருப்பம்கொள்வதே முழுமையை அடைய ஒரே வழியாகும். மனதின் அழுக்கைச் சுத்தப்படுத்துவதே புனித ஸ்நானமாகும். எல்லா ஜீவராசிகளுடையவும் சேம நலனைப்பாதுகாப்பதே மிகச்சிறந்த தானமாகும். ஒருவனது இரயம் பரிசுத்தமாக இருந்தால்தான் அனைவருடைய சேமநலனுக்காகப்பாடுபடலாம். அதற்கான பொன்னான விதிஇதுவே, "உனக்குஒத்துக்கொள்ளாததை மற்றவருக்குச் செய்யாதே."

ஆண்டவன் என அழைக்கப்படும் அவ்வுயர் அகத்தை அடைவதற்கு தருமம் என்னும் பாதையையே ஒருவன் பின்பற்றவேண்டும் உயர்கருத்துக்கொண்டு பார்ப்போமேயாகில் தருமமே கடவுளாகும். எல்லா சீவராசிகளிடையேயும் உள்ள இயல்பு அதுதான், ஆகவே பூரணத்வத்தைதேடி விழைவதைக்காட்டிலும் வேறு சிறந்த தர்மமில்லை. "ஆத்மாவின் பொருட்டு உலகத்தையும் துறந்திடு" என்பதாக இம்மகா காவியம் தைரியமாகக் கட்டளையிடுகிறது.

த்திருத்தி அழகிய திருவாசகங்களாக திருவெம்பாவையை அருளிச் செய்தார். சிற்சில ஊர்களிலே மார்கழிமாதப் பஜனைக்கோஷ்டி யார் மாத்திரம் ஏதோ பண்டுதொட்டுவந்த முறையென்றெண்ணி விடியற்காலையில் எழுந்து பஜனை செய்கின்றனர் திருவெம்பாவைப் பாடல்களை. இன்னும் சிலர் கோயிலிலே சென்று சில பாடல்களை பத்துநாட்கள் மாத்திரம் படித்துத் திரும்புகின்றனர். மணிவாசகர் காலம் திரும்பிவர வேண்டும் என்பது எமது அவா. சினிமாவுக்குத் தோழியரைக் கூட்டிச்செல்லும் வழக்கம்மாறி மார்கழி மாதப்பஜனை க்குத் தோழியரைக் கூட்டிச்செல்லும் வழக்கம் வரவேண்டும். அதைக்கருதியே திருவெம்பாவையில் முதலாவது பாடலை எடுத்து இங்கு சொல்லுகின்றேன். வைஷ்ணவர்களும் இதே கருத்தில் மார் கழி மாதத்தில் திருப்பாவை பாடுதல் மரபு. ஆதலால் இக்கருத்து இந்துக்கள் உள்ளத்தில் பண்டு தொட்டு ஊறிய பண்பாடாகும்.

அதிகாலை நான்கு மணியிருக்கும். சில கன்னியர்கள் வீதிவழியே அவன் புகழ்பாடிக்கொண்டு செல்கின்றனர். எதிரே ஒருதோழியின் வீடு தென்படுகின்றது. வீட்டு வாசலில் கூடிநின்று ஆண்டவன் நாமபஜனை செய்கின்றனர். அத்தோழியோ நேற்றையதினம் சொன் ளுள், 'நாளைக்கு நானே வந்து உங்களை எல்லாம் எழுப்புவேன்' என்று. இன்று இவர்கள் வந்து இவ்வளவு நேரமாகப்பஜனை செய் தும் அவள் எழும்பியபாடாக இல்லை. சிறு கோபமும் வருகின்றது வெளியே நின்ற வண்ணமே கேட்கின்றார்கள்.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடம்கண்
மாதே வளருதியோ?"

எதற்கு ஆதியுண்டோ? அதற்கு அந்தமும் உண்டு.

"நானிலம் யாவும் ஓர் நாடகசாலையே
ஆண்பெண் அனைவரும் அதில் நடிப்பவர்தாம்
மறைவும் தோற்றமும் மற்றவர்க்கிங்குள"

என்கின்றார் சேக்ஸ்பியர். உலகில் தோன்றின மறையும் மறைந்தன தோன்றும், இறைவன் ஒருவனே சாட்சி மாத்திரமாக நிற்பவன். ஆதியும் அந்தமும் இல்லா இறைவன் எப்படி இருப்பான் என்று கேட்டால். அவன் அரும்பெருஞ்சோதியாக நிற்பன். அவன் அருவா கவும் உள்ளவன். யார்யார் எப்படி வந்தனை செய்கின்றனரோ அப் படியாங்கே நிற்பன். "யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெ ய்வமாகியாங்கே மாதொருபாகனூர் தாம் வருவர்." "தென்னாடு

டைய சிவனே போற்றி என்றுட்ட வர்க்கும் இறைவா போற்றி என்ற பகுதிகள் சிந்தித்தற்குரியவை. இப்படிப்பட்ட இறைவனை யாம் பாட நீ கேட்டுக்கொண்டிருந்தும் நித்திரை கொள்கின்றாயோ உலகில் ஒருவனுக்கு அது முக்கியமோ அதைப்பெற நினைத்தால் நித்திரையே வருவதில்லை. நித்திரை வந்தாலும் ஒருசிறு சத்தம் கேட்டவுடன் துடி துடித்து எழுந்து விடுவான். நித்திரையால் மயங்கிய போதிலும் உணர்ச்சி வந்தவுடன் முதலில் நிற்பது அக்கருமமே. இறைவனை நினைப்பதிலும் பார்க்க இறைவன் புகழ் பாடுவதிலும்பார்க்க, இறைவனை வணங்குவதிலும் பார்க்க ஒருவனுக்கு என்னதான் உயர்ந்த தொழிலுண்டு. '-அவன் புகழ் நாம் பாட நீ கேட்டுக்கொண்டிருந்தும் தூங்குதலில் என்ன கருத்துத்தான் அமைந்துள்ளது: என்கிறார்கள் தோழியர்கள்.

தோழியே, உனது கண்களோ வாள்போன்று கூர்மையானவையும் அகன்றவையுமல்லவா? இந்த இலட்சணங்களைத் தூக்கத்திலிருக்கும் பெண்ணின் கண்களில் பார்க்கமுடியாது. தூக்கத்திலிருக்கும் தோழியை விழிக்கச்செய்வதற்காகவேதான் "வாள்தடங்கண் மாதே" என்று விளித்தனர்.

இவ்வளவு நேரமாகியும் தோழி துயிலெழுந்ததாகத் தெரியவில்லையே. தோழியின் காதுகள் மேல் சந்தேகம் வந்து விட்டது கன்னியர்களுக்கு, நின் செவிகள் இரும்பாற்செய்தனவோ? ஆண்டவன் புகழ் கேட்டும் நின் செவிக்கு உணர்ச்சிவரவில்லையே. "வன்செவியோ நின் செவிதான்". என்று அவள் செவியின்மீது குற்றத்தை ஏற்றி விட்டனர் கன்னியர்கள்.

கதவில் ஒரு சிறுது வாரம், அத்துவாரத்தினூடே பார்க்கின்றாள் பெண்ணொருத்தி: அவர் கண்ட காட்சி அவளையே திகைக்க வைத்து விடுகின்றது- தோழியைப் படுக்கையில் காணவில்லை. நிலத்திலே புரண்டு கிடக்கின்றாள். விம்மல் பொருமலுக்கிடையில் உடம்பு அசைவதைப்பார்க்கிறாள். தோழிகளுக்குத் தான் நிலத்திலே விழுந்து கிடப்பதே தெரியவில்லை. இப்படியெல்லாம் விம்மி விம்மி அழ வேண்டிய காரணம் தான் யாது? ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியாம் மாதேவனது நீண்ட வீரக்கழலையணிந்த திருவடிகளை கன்னியர்கள் தெருவீதியில் வரும்போதே துதித்த ஓசை வீட்டிற்குள் சென்று காதில் விழுந்ததும் தன் நினைவிழந்தாள். தன்னை

மறந்தாள், தன்னுமம் கெட்டாள், தலைப்பட்டாள் நங்கை தலைவ வன் தாள். இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாளை நினைத்ததும் அதே மயமாகிவிட்டாள். பூம்பள்ளியினின்று புரண்டதோ? அன்றி நிலத்தில் விழுந்ததோ? வெளியே நிற்கும் கன்னியர்கள் காத்துநிற்பதோ அறியாள். இவ்வளவு நிலையையும் கதவுத் துவாரத்தினூடே பார்த்தறிந்த பெண் யூகித்துணர்ந்தாள். 'ஈதே என் தோழி பரிசு' என்று ஆனந்தக்கூத்தாடினாள். இச்செய்தியை மணிவாசகப் பெருமான் அருளிய விதத்தில் பாருங்கள்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம்தோழி பரிசுஏலோர் எம்பாவாய்.

முதலும் முடிவும் இல்லாத, அரிய பெரிய ஒளி உருவனை சிவபிரானை நாங்கள் புகழ்ந்து பாடுவதைக்கேட்கும், வாள்போன்றதும் அகன்றதுமான கண்களையுடைய பெண்ணே! நீ உறங்குகின்றாயோ? அல்லது உன்காதுகள் மிக வலியனவோ? அன்றிச் செவிடானவையோ? [கதவின் துவாரத்துள் பெண்ணொருத்தி பார்க்கின்றாள்] மகாதேவனுடைய நீண்ட வீரக்கழல்களை அணிந்த திருவடிகளை பக்தர்கள் தெருவில் துதித்த துதிகளின் ஓசை தோழியின் வீட்டிற்குள் போய்க் காதில் வீழ்ந்ததும் ஏங்கி அழுது, தன்னை மறந்து பூம்பள்ளிமீது புரண்டு இப்படியாதொருபொருளும் ஆகாமல் மூர்ச்சித்துக் கிடக்கின்றாள். என்ன ஆச்சரியம் இதுவே எங்கள் தோழியின் இயல்பு.



# திருக்கார்த்திகைத் திருவிளக்கு.

(காமகோடி)

மாதந்தோறும் ஒவ்வொரு கார்த்திகை வருகிறது இரவுதோறும் பல விளக்குகளை ஏற்றுகின்றோம்: எல்லாக் கார்த்திகையையும் திருக்கார்த்திகை யென்பதில்லை. எல்லா விளக்கையுந் திருவிளக்கென்பதில்லை.

கார்த்திகைத் திங்களில் வரும் கார்த்திகை யொன்றையே திருக்கார்த்திகை யென்கிறார்கள். தெய்வத்தளியில் ஏற்றும் விளக்கையே திருவிளக்கென்கின்றோம். அது ஏன்? அவை! காலத்தமைதியால் கவினுறுகின்றன. இடத்தின் திடத்தால் ஏற்றமுறுகின்றன.

நம் முன்னோர்கள் அயரா முயற்சியாளர்கள். எனைப் பல பொருள்களையும் அவர்கள் மிக நுணுகி ஆய்ந்திருக்கிறார்கள். அவர்கள் உழைப்பில் கண்ட ஒண் பொருள்கள் யாவும் பின்னோர்கட்காமெனப் பேணியும் வைக்கப்பெற்றிருக்கின்றன.

அவை பெரு நூல்களில் புதைபட்டுக் கிடக்கின்றன. எளிதில் புலப்படா. உற்றுநோக்கி யுணரவேண்டும். உணர்ந்தாலவை மனத்திற்கு மகிழ்வையும் ஊட்டும்; வாழ்க்கைக்கு வழியையும் காட்டும்.

காலம்; கருத்தா லறியத்தக்க நுண்பொருள். இடம்; கண்ணாலுங் காண்டற் கெளிய பரும்பொருள். எவ்வகைப் பொருள்களும் இடத்தாலுங்காலத்தாலும் மாறுபடுவனவே.

ஒன்றை இன்பந்தரும் பொருள் என்றோ துன்பந்தரும் பொருள் என்றோ கூறிவிட முடியாது. எந்தக் காலத்தில் எந்த இடத்தில் என்று கேட்டறிந்தே இது இன்பத்திற்குரியது இது. துன்பத்திற்குரியது என்ற முடிவிற்கு வரவேண்டும்.

வேனிற்காலத்தில், உச்சிப்பொழுதில் நெடுவழி நடந்து நாவரட்சியுற்று வருந்திவருவான் ஒருவனுக்கு, நல்ல தண்ணீர்த் தடாகமும், தழைத்த மரத்தின் குளிர்ந்த நிழலும், மிகுந்த இன்பத்தைக் கொடுக்கத்தக்கவை. அந்த நிழல், நீர் மார்கழி மாதத்தில் மலிந்த

பனியில் வாடையுற்று வருந்துவாரொருவனுக்கு துன்பத்தை யல்ல வோ மிகுதியாக்கும். அப்போது காற்று நுழையாத புக்கிலும், கனல் நிறைந்த நெகிடியுமன்றோ, நலந்தரும்,

இனி, இன்ப துன்பங்கள் பொருள்களிலில்லை. காலத்திலேயே இருக்கின்றன என்று கொள்ளலாமா?

அவை காலத்தில் மாத்திரமில்லை இடத்தின் நலத்தையும் ஒட்டி யதாகவே உள்ளன, நீரும், நிழலும்; வேனிற் காலத்திலும், மருத நிலத்தில் செய்யும் இன்பத்தைவிட குறிஞ்சி நிலத்தில் தரும் இன்பம் மிகுதியாகும்.

ஆகவே, காலமும், இடமும், பொருளும் பொருந்தினல் இன் பம், இல்லையேல் துன்பம் எனக் கொள்ளலாமா? அதுவும் எளிதில் கொள்ளத்தக்க முடிவல்ல.

நீரும் நிழலும் வேனிற்காலமும் குறிஞ்சி நிலமும் சேர்ந்த நேரத் திலும், அநுபவிப்போன் குளிர் ஜுரத்தோடு இருந்தால் துன்பந்தான் தொடரும், இன்பம் எய்தாது.

இராவணன் சீதாதேவியின் அழகைத், திருகல் கருத்துள்ள சூர்ப்பனகைபால் கேட்டான். அவனுள்ளத்தில் காமநோய் வளர்ந் தது. பெருந்துன்பத்திற்கு ஆளானுன், தனக்கு நேர்ந்த துன்பத் திற்குக் காரணம், காலமும், இடமும் என்று கருதினன். வெவ்வேறு இடங்களிற் சென்று வைகினன். வெவ்வேறு காலங்களை வருத்தி னன், துன்பம் அதிகரித்தது. மாறவேயில்லை, விசிறியும் வேண் டாது, போர்வையும் வேண்டாதகாலம், சித்திரை முற்பகுதி, "ஈர மும் உளது இலது என்று அறிவரும் இளவேனில்" காலத்தைக் கொணர்வித்தான். அது வந்தது. துன்பம் நீங்கவில்லை. ஓங்கிற்று. இது கதைப் பகுதி.

பராக்குக் காட்டி உணவூட்டுதல், தாயின் பண்பு. கதையைக் காட்டிக் கருத்தை யூட்டுவது, கவின் பண்பு.

சில குழந்தைகள் பராக்குமட்டும் பார்க்கும். உண்ண இசை யாது. சில மக்கள் கதையை மட்டுங் கேட்பார்கள், மறுப்பார்கள்

வாதமிடுவார்கள். கருத்தைக் கருத்தில் கொள்ளார்கள்.

இனி, இராவணன் கதையால் காட்டுங் கருத்தைக் காண்போம் இராவணன், உடல் நோய்க்குக் காரணம், உள்ள நோய். உள்ளத்தின் நோய்க்குக் காரணம், ஒழுக்க மற்ற கலகச் சொல்லால் வந்த காமம். இந் நோயைச் சீலத்தால் களையலாமேயன்றி காலத்தால் களையமுடியாது. இதனைக் கவிகளிற் கவியான கம்பர் கூற்றில் காண்போம்!

"சூலத்தார் உலகமெல்லாம் குளிர்ப்பொடு வெதுப்பு நீங்க, நீலத்தா ரரக்கன்மேனி நெய்யின்றி யெரிந்த தன்றே, காலத்தால் ஆவது உண்டோ? காமத்தால் கனலும்வெந்தீ, சீலத்தால் அவிவது உண்டோ?"

இதனால்: காலம், இடம், அநுபவிப்போன் உள்ளம் இவை மூன்றும் பொருந்துவதற்கேற்ப இன்ப துன்பங்களெய்துகின்றன என்ற முடிவிற்கு வந்தோம்.

திருக்கார்த்திகைத் திருவிளக்கு என்ற தலைப்பை மறந்துவிடவில்லை இத்தனையும் அதற்காகத்தான்.

கால விரிவு; யுகம் ஆண்டு அயனம் இருது மாதம் பட்சம் வாரம் நாள் யாமம் மூர்த்தம் ஓரை எனக் காணப்பட்டுள்ளன. இவற்றுள் இருதுக்களைப் பெரும் பொழுதெனவும் யாமங்களைச் சிறுபொழுதெனவும் நூல்கள் நுவலுகின்றன.

இட விரிவு: அண்டம் புவனம் உலகம் கண்டம் தீவு பெருகோட்டம் நாடு சிறு கோட்டம் ஊர் என பகுதிபெற்றுள்ளன. இவற்றுள் நாடென்பது குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல்என்னும் நான்கு விதப் பண்பாட்டிற்குரிய நிலங்களாலாகி எந்த பொருள் பெறவும் வேறொரு நாட்டை நாட வேண்டாத விளைவுடையதாகும் "நாடென்ப நாடாவளத்தன".

குறிஞ்சி — மலையைச் சார்ந்த மேட்டுப்பகுதி. மருதம்... வயல் சூழ்ந்த பள்ளப்பகுதி மேட்டு நிலத்தில் தங்கி மகிழ்ச்சியுற, வரட்சியான கோடைக்காலம் பொருந்தாது. குளிர்ச்சியான வாடைக்காலமே பொருந்தும்.

குளிர் காலத்திலும், பனி நீங்கி நீங்கார்த காலை நேரம் பொருந் தாது. மாலை நேரமே நலமாகும் அல்லவா? இதனை ஒல்காப் பெரு மைத் தொல்காப்பியனார் "காரும் மாலையும் குறிஞ்சிக்குரிய" என விதந்தோதுதல் காண்க.

இந்தக்கார் காலத்தில், மாலை நேரத்தில், ஊரவர் எல்லாம் ஒரு ங்கு கூடி, ஒருமைப்பட்ட மனத்தவராகித், தாங்கள் ஆனியில் உழுத உழவும், ஆடியில் தேடி விதைத்த விதைப்பும், புரட்டாசி யில் நட்ட நடவும், மழை நலங்கொண்டு, மாண்புற வளர்ந்து, கதிர் வளங்காட்டிக், கவின் பெறு நிலையைக் கண்டு, இனி ஈத லும் இசைபட வாழ்தலும் வல்லோமென மகிழ்ந்து, சொக்கப்பனை கொளுத்திச் சுடர் விளக்கேற்றிக் கடவுளை வணங்குதல் பண்டைய வழக்கம்.

இதனை

"நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்டதலை நாள் விளக்கில் தகையுடையவாகிப் புலமெலாம் பூத்தன தோன்றி சில மொழி தூதொடு வந்த மழை" எனக் கார் நாற்பதில் கண்ணங் கூத்தனார் கூறுதல் காண்க.

ஊரவர் தத்தம் ஊர்கோவில் தீப ஸ்தம்பத்துச்சியில் விளக்கே ற்றி வணங்குகிறார்கள். நாட்டவர் கூடி தம் நாட்டில் உயர்ந்த குறி ஞ்சி நிலக்கோவிலை நாடுகிறார்கள்.

தமிழ் நாட்டில் தலையாயயிடம் திருவண்ணாமலை. தேசத்திலு ள்ள மற்ற மலைகள் தெய்வத் திருவுருவங்களுக்கு இருப்பிடமாக நிலவுகின்றன. திருவண்ணாமலை தானே தெய்வத் திருவுருவமாகப் போற்றப்படுகிறது.

தெய்வத்தின் இருப்பிடம் அடியார்கள் சித்தம். அடியவருள் ளத்தில் ஆண்டவன் வெளிப்படையாக வீற்றிருக்கின்றான். மற்ற வருள்ளத்தில் மறைந்திருக்கின்றான்.

நிறைந்த வுள்ளம் படைத்த பெரியோர்கள் குறைந்த வுள்ள முள்ள குதலை மக்களுக்காக இரங்குகிறார்கள்.

இரங்கி யிரங்கித் தங்களுள்ளத்தில் தோன்றுத் துணையாக நிற்கும் பரம்பொருளைத் தோற்றமுள்ள ஒரு திருவுருவத்தில் வைத்துப் போற்றி மற்றவர்களும் உய்யக் காட்டுகிருர்கள்.

அன்பர்கள் உள்ளத்தில் உள்ள ஆண்டவன் அவர்கள் பார்வைபட்ட உருவத்தில் படர்கின்ருன்.

திருவண்ணுமலையைச் சார்ந்த அன்பர்கள் எத்தனை கோடி? அத்தனை உள்ளத்தில் ஒளியுங் கூடிய ஆற்றல்கொண்டு அதுஉயர்ந் திருக்கிறது.

நீரின் குணம் சேர்ந்த நிலத்திற்கேற்ப மாறும். மக்களின் மனம் கூடிய கூட்டத்திற் கொக்க சேரும். அன்று முதல் இன்று வரை உத்தமர்கள் உள்ளத்தின் சேர்க்கைக்கு உறைவிடமாகிய அண்ணுமலையை அணுகும் வன்பர்கள் மனமும் அன்பர்கள் மனமாக மாறுகிறது.

அரசும் அறமும் நூலும் ஆக்கமும் மக்கள் மனமாற்றம்பெற வேண்டுமென்ற கருத்தையே கடைப்பிடிப்பன. இந்த அரிய வேலை எளியதாகக் கை கூடுகிறது அண்ணுமலையில்.

மாதங்களுக்குப் பேர் வந்தது பூரணச் சந்திரனுல், சந்திரனுக்கு மதியென்று ஒரு பேர். மதியால் வந்தது மாதமாகிறது.

பூரணச்சந்திரன் எந்த நட்சத்திரத்தோடு கூடுகிறதோ, அந்த நட்சத்திரத்தின் பெயரே அமைந்திருக்கிறது.

சித்திரையோடு பௌர்ணமி சேரும் மாதம் சித்திரை. விசாகத்தோடு பௌணமி சேரும் மாதம் வைகாசி (விசாகம்). அதுபோல கார்த்திகையோடு பௌர்ணமி சேரும் மாதம் கார்த்திகை. கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகையர்தலினுல் இதுதிருக்கார்த்திகையாயிற்று.

பண்டே அன்பர்கள் கூடிப்பரவிய கோவில், சோஓ என்று மழையடித்தாலும் ஈரம் பிடித்து இடைஞ்சல் செய்யாத மலையடி இடம், வெப்பம் வேண்டி குளிர் மிகுந்த கார் காலத்திற்குகந்தமாலை

# பெரியோரின் உள்ளம்.

ஒரு சமயம் விச்வாமித்ரருக்கும், வசிஷ்டருக்கும் காமதேனு என்ற பசுவிஷயமாய் சண்டை ஏற்பட்டது. விச்வாமித்ரர் அதில் தோற்ருர். தான் தோற்றதற்குக் காரணம் வசிஷ்டரின் பிர்மதேஜஸின் பலம்தான் என்பதையறிந்தார். தானும் பிர்மதேஜஸையடைந்து பிர்மரிஷியாக ஆகவேண்டும் என எண்ணினர், நான்முகனைக் குறித்துக் கடும் தவம் செய்தார். நான் முகன் விச்வாமித்ரரின் முன் தோன்றினன். விச்வாமித்ரரை நோககி. "முனிவரே! நான் உமக்கு மஹரிஷி என்ற பட்டத்தையளிக்கிறேன். ஆனல் பிர்மரிஷி என்ற பட்டத்தையளிப்பதற்கு நான் தகுதியுள்ளவன் அல்ல. பிர்மரிஷிகளுக்குள் மிகச்சிறந்தவரான வசிஷ்டர் ஒருவர்தான் அப்பதவியை உமக்கு அளிக்க முடியம்" என்ருர். புலன்களையடக்கி எத்தனை ஆண்டுகள் தவம் செய்தும் வசிஷ்டர்மீதுள்ள பகைமை குறையவில்லை சங்கரரைக்குறித்துத் தவம் செய்தார். அனேக ஆயுதங்களைப்பெற்ருர். ஆனல் பொறுமையே பூஷணமாக உடைய வசிஷ்டரின் பிர்மதேஜஸின் முன்னல் எல்லா ஆயுதங்களும் வீணாயின. விச்வாமித்ரர் பிறப்பில் க்ஷத்ரியர். பிறர்முன் வணங்கியறியார் தன்மான முடையவர், ஆகையால் கோபமும். பொருமையும் அதிகமாயின. மேலும் கடும்தவஞ்செய்தார். "புதிய உலகங்களைப் படைக்கிறேன்" என்று ஆரம்பித்தார். பிர்மதேவன் வேண்டுகோளின் மேல் படைப்பதை நிறுத்தினர். தவத்திற்கு அனேக இடையூறு

---

முற்பக்கத்தொடர்ச்சி

நேரம், பல்லாயிர மக்கள் கூடி அரகரவெனப் போற்றி எதிர்பார்க்கும் அமைதி மேற்பால் கடல் நோக்கும் செங்கதிர், கீழ்ப்பால் கடல் விட்டெழும் பூரண வெண்கதிர். இடையில் பஞ்ச மூர்த்தங்களின் முக வொளி, யாவர்க்குங் கீழ் நோக்கங்கிடையாது, வாழ்விற்குரிய பரந்த மேல் நோக்கம். இந்த நேரத்தில் அண்ணுமலையார் அணிமுடி மேல் தோன்றுகிறது ஒரு பெரு விளக்கு. அது ஜக இருளை மட்டுமா போக்குகிறது? மாயாத அக விருளையுமன்றோ போக்குகிறது. இவ்விளக்கே யாதினுஞ் சிறந்த திருவிளக்காகிறது இதனை நாம் போற்றிப் புகழ்ந்து. ஏற்றியிறைஞ்சியின்புறுவோமாக

களும் நேர்ந்தன. விச்வாமித்ரர் சளைக்கவில்லை. ஓர் ராக்ஷசன் மூலமாய் வசிஷ்டரின் பிள்ளைகளைக் கொன்றுர். சாந்தமே உருவானவசிஷ்டர் இதற்கும் பொறுமையாகவேயிருந்தார். விச்வாமித்ரரின் கோபம் இன்னும் அடங்கவில்லை நேரில் எதிர்த்து அனேகமுறை தோற்று இருந்ததால் இரவில் சென்று தூங்கும் சமயத்தில் வசிஷ்டரை ஒழித்துவிட எண்ணினுர். பழி வாங்கும் எண்ணம் உச்சநிலையை அடைந்தது.

ஓர் பூர்ணிமை இரவு. நாட்டிலே ஓர் அழகிய குடிசை வெளித்திண்ணையிலே, வசிஷ்டரும் அவர் மனைவி அருந்ததியும், பேசிக்கொண்டிருக்கிறுர்கள்.

அருந்ததி—எவ்வளவு களங்கமற்ற நிலவு. அமைதியான இரவு. தவத்துக்கேற்ற சாந்தமான இடம். பெரியோர்களின் களங்கமற்ற உள்ளம் போல் இருக்கிறது. வசிஷ்டர்... ஆம். இந்நிலவு விச்வாமித்ரரின் தவ ஒளி போல் எங்கும் பிரகாசிக்கிறது. "விச்வாமித்ரரின் தவ ஒளி"! கையில் கூர்மையான ஆயுதத்துடன் வசிஸ்டரைக் கொல்ல வேண்டுமென்று மரங்களின் மறைவில் ஒளித்திருந்தவிச்வாமித்ரர் திடுக்கிட்டார், "தனிமையில் தன் மனைவியுடன் தன் பகைவனைப் புகழும் இவ்வுண்மையான உத்தமரைக் கொல்ல திருடனைப்போல் இரவில் ஒளிந்து வந்தேனே! நான் மனிதனிலும் கடையன் என எண்ணி, மஹாத்மாவான வசிஷ்டரின் தூய உள்ளத்தையறிந்தவுடன் பழிவாங்க வேண்டும் என்ற மனம் மாறியது விச்வாமித்ரருக்கு, கையிலுள்ள ஆயுதத்தைத் தூர எறிந்தார், ஓடி வந்தார் வசிஷ்டர் முன்: "என்னை மன்னிக்க வேண்டும்" என்று அடிபணிந்து வணங்கினுர். அருந்ததி திடுக்கிட்டாள். வசிஷ்டர் விச்வாமித்ரரை "பிர்மரிஷி விச்வாமித்ரரே" எழுந்திரும், என்று கூறி தூக்கி அணைத்துக் கொண்டார்,

ஆயுதங்களைத் துறந்து. பொறுமையே பூஷணமாகக்கொண்டு எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமல், விருப்பு வெறுப்பு அற்றவராய் இருப்பவரே பிர்மரிஷி.

---

# நானும் எனது குருநாதரும்.

(அ. இராமசாமி, ஜோகூர்பாரு, மலாயா)

17-4-55 இன்று இரவு, நான் படுக்கும் இடத்தில் நூறுசக்தி உள்ளவெளிச்சத்தைப்போட்டுக்கொண்டு ஒரு செட்டியாரும் அவர்மகனும் வேலைபார்த்தார்கள். அந்த வேலை, கப்பலுக்குப் புறப்படும் சம்பந்தமானது.

விடியற்காலம் மணி 3-30 ஆகிவிட்டது. இரவெல்லாம் தூக்கம் வராமல் இருந்ததைக்கூட நான் பொருட்படுத்தவில்லை. மணி 4க்கு தியானம் செய்யவேண்டுமே! தியானம் செய்வதற்கு வேறு நல்ல இடம் இல்லையே! என்செய்வேன்! என்று, நானே மனதிற்குள் சொல்லிக்கொண்டேன், நான் கவலையடைந்து கொண்டிருக்கும்போது, அந்தச் செட்டியார், அவராகவே அவர் மகனிடம் சரி, சரி, எல்லாவற்றையும் பூட்டியெடுத்துவை. வேலையெல்லாம் முடிந்து விட்டது. கொஞ்சநேரமாவது தூங்குவோம், என்றார், மணி 3-40க்கு அவரே விளக்கை அணைத்து விட்டு இருவரும் படுத்து உறங்கினார்கள். நான் மணி 4க்கு வழக்கம்போல் அமைதியாக தியானம் செய்தேன். வாசகர்களே! எனது அருமைக்குருநாதரின் திருவடிச்சக்தி, சாதகனின் செயலில் எவ்வளவுகவனமாகத்துணை செய்கிறது என்பதைக் காண்பீர்களாக!

20-4-55 அன்று இரவு கனவில் திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி அடிகளாரின் முகத்தோற்றத்தை, ஒருவர் பென்சிலால் எழுதிக்காண்பித்தார்.

21-4-55 என் குருநாதர் என்னை உலகத்தோடு ஒட்டாமல் பற்றற்று வாழ அருள் புரிந்து வருகிறார். நான் வளர்த்துக்கொண்டு வருவது, என் அன்னையின் கிருபையையும் பேரின்பத்தையுமே ஆஹா! நான் அடையும் இன்பத்திற்காக குருமகாராஜ ரவர்களுக்கு நான் கைமாறு எதைச்செய்யக்கூடும், என் வாழ்நாள் முழுதும் அவரின் திவ்ய திருவடிகளிலே என் சிரசுபடும்படி சரணமடைந்து கிடந்தால், ஒருவாறு ஈடாகுமா? என்று எண்ணினேன். என் கண்கள் நீரைச்சிந்தின.

அடியேன் என் குருநாதரின் திருவடி மகிமையை நினைக்கும் போதெல்லாம், நான் வேறொரு மனிதனாகவும் பரிபூரணானந்தனாகவும் மாறிவிட்டவன் போல் தோன்றுகிறேன். குருநாதரின் திருவடி இன்பத்திற்கு இணையேயில்லை.

22-4-55 இன்று இரவு மணி 7-30க்கு ஜோகூர்பாரு ராஜ் மாரியம்மன் கோவில் சந்நிதானத்தில் ஆரம்ப பஜனையில் கலந்து கொண்டேன் அன்றிரவு கனவிலும் பஜனை நடந்ததைக்கண்டேன்.

நான் செய்யும் பஜனை. அன்று கனவிலும் நடந்து வருவது என் பாக்கியந்தான் கனவிலும் பஜனை நடப்பது நிச்சயம் என்பதை நான் பல தடவை அறிந்திருக்கிறேன்.

என் குருநாதர் திருவடி வாழ்க!

27-4-55 இன்று கோலாலம் பூர் சிவானந்த பொதிஜூ அவர்களின் கடிதமும், அதனுள் குருமகாராஜ் எனக்கு எழுதிய இங்கிலீஷ்கடிதத்திற்கு, தமிழ் மொழி பெயர்ப்பு கடிதங்களும் இருந்தன. அவற்றை நான் வாசித்துக்கொண்டிருக்கும்போது: என் நெஞ்சினுள் இருந்து ஓர் காந்தசக்தி என் சிந்தனையையும் நினைவையும் உள்முகமாக இழுத்ததைத் தெளிவாகக் கண்டேன். நான் எழுதிக்கொண்டிருந்த பேனா, அப்போது அசையாமல் நின்று விட்டது. அதுவும் என்னுடன் சேர்ந்துதபசு செய்வது போலத்தோன்றியது.

ஸ்ரீ குருநாதரின் திருவருள் பெற்று வாழும் பக்தனின் இருதயம் எந்த நேரத்தில் எவ்வாறு செயல் புரியும் என்பதை யாரே யறிய வல்லார்?

28-4-55 இன்று தினம் என் குருநாதரிடமிருந்து 'சிவானந்த திக்விஜயம்' என்றபுத்தகம் கிடைத்தது. அதை ஒவ்வொருதாளாய்ப் புரட்டிக்கொண்டிருக்கும்போது, என் மேல் முதுகிலிருந்து பின் உச்சந்தலைவரை உணர்ச்சி ஏற்பட்டது, கண்கலங்கியது. மந்திர வசப்பட்ட நாகபாம்புபோல் ஆனேன்: இத்தனை பக்கங்களையும் நான் படித்து முடிப்பதற்கு என் கண்களினுள் இருக்கும் நீர், சிந்தப்பற்றுதுபோல் தோன்றியது,

என் இஷ்டதேவி அன்னையின் கிருபையினாலும், என் குருநாதர் திருவடி சக்தியினாலும், எனக்குக் கிடைக்கும் ஆச்சரிய சம்பவங்களை நான் பிறரிடம் வெகு பிரியமாய்ச் சொல்கிறேன், நான் சொல்வதைக் கேட்டபிறகாவது தெய்வத்தை நம்பி வாழப்பழகுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிசய சம்பவங்களைப் பிறரிடம் சொல்வதினால் சக்தி கொஞ்சம் குறைந்துபோகுமென்பது எனக்குத் தெரியும். ஆயினும் பிறரை மேல்நிலைக்குத் தூக்கிவிடவேண்டும் என்ற பேர் ஆர்வத்தினால் சுயநலம் அற்றுப்போகிறது.

ஒருநாள் நான் மனோவேகத்தினால் தூண்டப்பெற்றவனாய்,ஒரு மகா பிரசங்கம் செய்தேன். என்மேன்மை தங்கிய பிரசங்கத்தைக் கேட்டது. ஆயிரக்கணக்கானவர்களும் நூற்றுக்கணக்கானபேர்களும் அல்ல, என் நண்பர் ஒருவர் மட்டுமே? சாதாரண நிலையில் நின்று கொண்டுபேசிய மிக மெதுவான பேச்சு, பிரசங்கமாய் மாறியதும், அவர் என் பிரசங்கத்தை எதிரில் நின்று கொண்டே ஆனந்தமாய்க்கேட்பவராகமாறியதும் அதிசயமே! நான் பேசிக்கொண்டிருக்கும் போதே என் தொண்டைவரண்டு விட்டது. இடையிடையே சிரமம் அடைந்தேன். ஆனாலும் உணர்ச்சி வேகத்தில் நடந்த சம்பவம் அது. பிறகுதான்சொன்னேன். ஐயா! என்குருநாதர் உபதேசம், அதிகமாய்ப் பேசாதே என்று ஆனால் பிறருடைய நன்மையைக் கருதும்போது இந்த உபதேசத்தை மறந்து விடுகிறேன் என்றேன்.

பிரசங்கம் முடிந்து வீட்டுக்குத்திரும்பும் போதுதான் எங்கள் இருவருக்கும் கால்கள் வலிப்பது தெரிந்தது.

இந்தப்பிரசங்கம் இவ்வளவு வேகமாக உற்பத்தியானதற்குக்காரணம், நான் மெதுவாகப்பேசிய சாதாரண பேச்சை ஆர்வமுடன் சிரம் அசைத்துக் காது குளிரக்கேட்ட அன்பர். உபாத்தியாயர் மாணிக்கவாசகர் என்பவர்தான்.

பிரசங்கத்தின் மதிப்பு ஆள் கூட்டத்தைமட்டும் பொறுத்ததல்ல, பிரசங்கம் செய்பவரின், எதிரிட்ட வரைக்கவரும் மனோசக்தியையும், கேட்பவர்களின் மனோசக்தியையும் பொறுத்திருக்கிறது. கேட்பவர்களின் மனதை வசப்படுத்தும் திறமையற்றவர் பிரசங்கம் செய்வதற்கு உரியவராக மாட்டார்.

பக்தனின் இருதயத்தில் சக்தியை நிறைப்பது குருநாதரின் திருவடியும் இஷ்ட தெய்வத்தின் திருவருளுந்தான்

வாழ்க என் குருநாதர் திருவடி

# அன்னையின் வெள்ளிவிழா.

அன்னை கிருஷ்ணபாய் அவர்கள் உலக வாழ்க்கையைத் துறந்து உலக மக்களின் நலனுக்கும் சேவைக்குமாகத் தன்னை அர்ப்பணித்த புண்ணிய தினத்தின் வெள்ளிவிழா 29-11-55 செவ்வாயன்று அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆனந்தாச்சிரமத்தில் காலை 5-30 மணிக்குத் தியானத்துடன் ஆரம்பித்தவிழா இரவு 1 மணிவரையில் முடிவடைந்தது. இந்தியாவின் பல பாகங்களிலுமிருந்தும், இலங்கை, பாரிஸ், லண்டன் முதலாய இடங்களிலுமிருந்தும் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட அன்பர்கள் விழாவில் கலந்து கொண்டனர். மூவாயிரத்துக்கு மேற்பட்ட ஏழைகட்கு அன்னதானம் வழங்கப் பட்டது.

மிகவும் சுவையான கட்டுரைகளும், உள்ளத்தை உருக்கும் வகையான பக்தர்களின் அனுபவங்களும் நிறைந்த வெள்ளிவிழா மலர் அன்னைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதனை அன்னையார் மேடைமேல் எழுந்தருளியிருந்த சுவாமி இராமதாஸர் அவர்களது திருவடிகட்கு அர்ப்பணித்து வணங்கிய காட்சி உள்ளத்தை நெக்குருகச் செய்தது. விழா வைபவம் முழுவதுமே உணர்ச்சி ஊட்டுந்தரத்ததாய் அமைந்திருந்தது.

விழாத்தொடர்பில் எழுதப்பட்ட நாமங்கள் அடங்கிய புத்தகங்களும் அன்னையின் திருவடிகட்கு அர்ப்பணிக்கப்பட்டன. விழாத்தொடர்பில் 1-10-53ல் ஆரம்பித்த நாமலிகித ஜெபயாகம் விழாவுடன் முடிவடைந்தது.

10-11-55 வரையில் ஆச்சிரமத்துக்கு அனுப்பப்பட்ட கொப்பிகளின் படிக்கு 32. 5, 333, 158 நாமங்கள் எழுதப்பட்டுள்ளன. தென் கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து 3, 196, 099 நாமங்களும், லண்டனிலிருந்து 36, 321 நாமங்களும் இலங்கையிலிருந்து 10, 881, 382 நாமங்களும் மலாயாவிலிருந்து 23, 826 நாமங்களும் எழுதியனுப்பப்பட்டுள்ளன. இந்த யாகம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது 25 கோடி நாமங்கள் எழுதப்படவேண்டும் என்றே கருதப்பட்டுள்ளது. அன்பர்களின் பக்தி சிரத்தை காரணமாக 32 கோடிக்குமேற்பட்டுவிட்டது 5312 அன்பர்கள் இந்த யாகத்தில் பங்குபற்றியுள்

## கொக்குவில் மகாத்மா காந்தி ஞாபகார்த்த

# ஹரிஜன மாணவர் சகாய நிதி.

(ஆரம்பம் 1955)

# அறிவித்தல்.

வறிய ஹரிஜன மாணவர்களின் கல்விக்குப் பணவுதவி செய்வ தற்காக மேற்படி நிதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உதவி பெற விரும்பும் மாணவர்கள், அதற்குரிய விண்ணப்பப்பத்திரத்தை பூர்த் திசெய்து காரியதரிசி, மகாத்மா காந்தி ஞாபகார்த்த ஹரி ஜன மாணவ சகாயநிதி C/o ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை, கொக்குவில் என்ற விலாசத்திற்கு 25-12-55 க்கு முன் அனுப்பவேண்டும். பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

நிபந்தனைகள் வருமாறு:—

(1) மாணவர் இவ்வருடம் 5-ஆம் வகுப்புச் சித்தியெய்தியவ ராயும், 1—1—56ல் பன்னிரட்டு வயசுக்குட்பட்டவராயும் இருத்

---

*முற்பக்கத்தொடர்ச்சி*

ளார்கள். விரும்பும் அன்பர்கள் நாமம் எழுதுவதைத் தொடர்ந்து நடத்தலாம். அப்படி எழுதுவது அவர்களுக்கு நிரந்தரமான நன் மையைப் பயக்கும். ஆனால் மந்திரம் எழுதும் புத்தகங்களை ஆச்சி ரமத்துக்கு அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகின் றனர். ஆச்சிரமத்தில் இடவசதியின்மையால் அன்பர்களே புத்தகங் களை வைத்துக்கொள்ளலாம்.

கொழும்பு நாவலப்பிட்டி முதலாய இடங்களிலும் இவ்விழா கொண்டாடப்பட்டது.



தல் வேண்டும். (5-ம் வகுப்பு முடிபுகளை விண்ணப்பத்தேதிக்குள் பெறமுடியாதவர்கள் அவற்றைப் பெற்றவுடன் தலைமையாசிரியர் மூலம் தெரிவிக்கவேண்டுமென்ற நிபந்தனையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.)

[2] பாஷை, எண், பொதுஅறிவுசம்பந்தமான ஒருஎழுத்துப் பரீட்சையும், நேர்முகப் பரீட்சையும், கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை மண்டபத்தில். ஷெ நிதிச்சபையாரால் நடத்தப்படும். எவ்விஷயங்களிலும் சபையின் தீர்ப்பேமுடிவானது

[3] தெரிந்து எடுக்கப்பட்ட மாணவர்கள் தமக்கு வசதியான இந்துக்கல்லூரி ஒன்றில் **G. C. E.** வகுப்புவரை படிக்க. வருடமொன்றுக்கு 60|- ரூபா வீதம் 5 வருடங்களுக்குப் பணவுதவியளிக்கப்படும். நிதிப் பொறுப்பாளர் சபை பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் திருப்தியில்லாவிடத்து உதவிப்பணம் நிறுத்தப்படும். பண உதவி பெறும் பிள்ளைகளின் பெற்றூர் அல்லது பாதுகாவலர் காரியதரிசிக்கு தவணைத்தேர்வு அறிக்கைகளை அனுப்பவேண்டும்.

[4] இவ்வருடம் 6 பிள்ளைகள் தெரிந்தெடுக்கப்படுவார்கள்

[5] விண்ணப்பம் அனுப்புவோருக்குப் பரீட்சைத்தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

காரியதரிசி

*மகாத்மா காந்தி ஞாபகார்த்த*
*ஹரிஜன மாணவர் சகாய நிதி.*

*கொக்குவில்*
*15.11-55*



# தாயோடு அளாவல்

கே: தங்களின் இந்த ஆடல் எதனால் ஆக்கப்பட்டது?

வி: சாத்வீகம், தாமதம், ராஜதம் என்னும் முக்குணங்களினால்

கே: இந்த வேறுபாடுகளில் விகற்பங்கள் தோன்றுவதெப்படி?

வி: முக்குணங்களின் எண்ணற்ற கூட்டு நிகழ்ச்சிகளினால் விகற்பங்கள் தோன்றுகின்றன. இம்முக்குணங்களின் சேர்க்கையை பிரகிருதி எனப்படும்.

கே: தாயே! தாங்கள் பிரகிருதியிலிருந்து பிறம்பானவர்களா?

வி: குழந்தாய்! என்னால் பிரகிருதி இருக்கிறது. ஆனால் நான் பிரகிருதியில் இல்லை.

கே: பிரகிருதி சித்தியமானதா?

வி: தனிமுறையில் இல்லை ஆனால் கூட்டுமுறையில் உண்டு. பிரகிருதிக்கு சார்பு நிலையே யல்லாமல் தனித்த நிலை இல்லையென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். நானே முழு உண்மை

கே: துக்கமும் துன்பமும் அல்லவையாயின், அன்பு, உண்மை, ஈகை, தயை, நன்மை, தூய்மை, ஆதிய பண்புகள் இவ்வுலகில் இருப்பானேன்?

வி: இவ்வுலகம் ஒரு ஆடலெனக்காணும் நிலையை: யானே பலவாகக் காட்சி கொடுக்கிறேன் என்று அறிவதினாலேதான் எய்த முடியும். பூரண ஐக்கியத்தை அடைவதற்குமுன் முக்குணங்களையும் கடந்தாக வேண்டும்.பரந்த அன்பு, தூய்மை உண்மை, தயை, ஈகை முதலியனவற்றால்இந்த ஒருமையை அடைய முடியும்.

கே: இந்த அனுபவம் என்ன?

வி: முக்குணங்களுக்கும் ஒரு ஆனந்த சாட்சியாக இருக்கச் செய்வதேஇந்த அனுபவம்.இன்பதுன்பங்களினாலும் மற்றும் இவை போன்ற இருமைகளினாலும் நீ ஒரு போதும் பாதிக்கப்படமாட்டாய் "நானே நீ" என்னும் உண்மையை அப்போது நீ உணர்வாய்.

[தொடரும்]

# நாம மகிமை

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமி சிவானந்த சரஸ்வதி அருளியது,

தெய்வத்தின் திருநாமத்தை சரியாகச் சொன்னாலும், தப்பாகச் சொன்னாலும் அறிந்து சொன்னாலும் அக்கறையுடன் சொன்னாலும் அசட்டையாகச் சொன்னாலும். அதன் விளைவு நன்மையே பகவன் நாம மஹிமையை வெறும் விவாதத்தாலும், அறிவுத்திறமையினாலும் நிலைநாட்ட முடியாது; பக்தி விசுவாசத்துடன் நாம உச்சாரணை இடையறாது செய்வதன் மூலம் அதன் மஹிமையை அனுபவத்தில் தெரிந்து கொள்ளலாம், ஈசனுடைய ஒவ்வொரு நாமத்துக்கும் எண்ணிக்கையில் அடங்காத ஆற்றலும் சக்தியும் உண்டு. நாம சக்தியை சொல்லால் விளக்க முடியாது. அதன் மஹிமை வர்ணனைக்கு எட்டாதது மந்திர சக்தியையும், அதன் பயனையும் யாரும் ஆழம் பார்க்க முடியாது.

பற்றியெரியும் பொருள்களைத் தீ தகித்துவிடுவதுபோன்று, கடவுளின் திருநாமமானது பாபத்தையும், சம்ஸ்காரங்களையும் கொளுத்திவிட்டு, அதை உச்சரிக்கின்றவர்களுக்கு நித்தியானந்தத்தையும் சாசுவத சாந்தியையும் கொடுக்கவல்லது, எரிக்கும் தன்மை இயல்பாக அக்கினியில் இருப்பது போன்று, சாதகனை பாவ சமாதியின் மூலம் பகவானுடைய பேரானந்தத்தில் சேர்த்து வைக்கும் இயல்பு பகவன் நாமத்துக்கு உண்டு.

மானுடா, பகவன் நாமத்தில் அடைக்கலம் புகுக. பகவானும் பகவானுடைய நாமமும் ஒன்றே, இடையறாது இறைவனுடைய திருநாமத்தைப் பாடு, மூச்சு வாங்கும்போதும், விடும்போதும், இறைவனுடைய திருநாமத்தையே நினைத்துக்கொண்டிரு. இக்கலியுகத்தில் கடவுளை அடைதற்கும். அழிவில்லாப்பேரின்பத்தை அடைதற்கும் நாம ஸ்மரணை அல்லது ஜபம் ஒன்றே உற்ற உபாயம். எளிதில், விரைவில்; இடுக்கண் இன்றி, உறுதியாக அது பலன் அளிக்கிறது. ஈசன் வாழ்க, ஈசன் நாமம் வாழ்க.

"நமச்சிவாய வாழ்க, நாதன்தாள் வாழ்க
இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்தாள்வாழ்க."

என்பது திருவாசகம்.

# சத்தி வணக்கம்

சத்திய வழியில் நில்லாத் தன்மையால் தாயே நாயேன்
நித்திமும் துயராற் சூழ்ந்து நிலைதடு மாறுகின்றேன்
எத்திறத் தன்மையால்யா னின்னல்தீர்ந் தடிமை யாவேன்
சத்தியா மூலகமாதா தவறிய பொறுத்தாள் நீயே

சிற்றறிவு வுடைய நாயேன் செய்தன பிழைகட் கெல்லாம்
முற்றறி வுடைய மாதா மீட்சியு முண்டு சொல்லோ
கற்றறி வில்லரக் கோபக் கசடனேன் கொலைக்கு மஞ்சா
சிற்றறி வுடையேனம்மா தேவியே தாயே போற்றி

போற்றியென் தாயேபோற்றி புகலிடம் நீயே போற்றி
மாற்றியான் பிறவா வண்ணம் மயக்கறுத் தாள்வாய்போற்றி
தேற்றிநீ யாளாயாகில் தேவியே யாங்கு செல்வேன்
சாற்றினே னுலகமாதா தமியனே னபயம் கண்டாய்

உன்னடி யாசை யொன்றே உறுபவ நோயைப் போக்கும்
பொன்னடி போற்ற லொன்றே பிறப்பினின் பேறதாகும்
தன்னுனடி நினைய வைத்து தன்பய மாக்கு மாதா
என்னுளே யுயிரா யுள்ளாய் உன்னடி யுணர்வு நல்கே

கல்லையு முருக வைக்கும் கனியருட் கண்ணுய் என்னை
தொல்லையாம் பாதை நீக்கித் துணையடி யுணர்வையீயின்
எல்லையில் கருணைக் கேது பிழுக்குண்டோ பெருமை யன்றோ
வல்லையா யீர்த்தாட் கொள்வாய் வடிவுடைத் தாயேபோற்றி

பக்தியாற் குழைந்து நொந்து பாமலர் சூடிக் கூவும்
முத்தியார் தமக்குள் தூங்கும் முதல்வியே யுலக வாசை
மத்தியில நின்றுமாயும் மதியிலாக் கசடனேனை
சத்தியாம் தாயே யுன்றன் தண்ணருள் தன்னுல் மீளே.

*சி. இராசரத்தினம்*

---

ளார்கள் இந்த நாட்டில். எல்லோரும் தமது கடமையை உணர்ந்து நமது புராதன, சனுதன தர்மத்திற்கு அரும்பணியாற்றி வந்திருக்கிருர்கள், இந்தக் கடமையிலிருந்து எந்த ஒரு ஹிந்துவும் விலகியிருக்க நியாயமில்லை. முடியாது. இந்தக்கடமை உணர்ச்சியை எல்லா ஹிந்துக்களும் ஷ நிகழ்ச்சிகள் உண்டு பண்ணும் என்றே நம்புகிருேம் நாகர்கோவில் பல நாட்களாக இத்துறையில் வேலை செய்து வெற்றியடைந்து வருகிறது. இந்த சமீப நிகழ்ச்சியும் ஹிந்துக்கள் முற்றிலும் வெற்றியடைய அடிகோலிவிட்டதாக கண்டிப்பாக ஆகும் என்றே நாம் நம்புகிருேம்

Regd. at the G. P. O, as News Paper, H. C. 59 500

# RELIGIOUS DIGEST

AN INTERNATIONAL JOURNAL, DEVOTED TO THE TEACHINGS OF PROPHETS, SAGES & SAINTS OF EAST & WEST.

FOR THE PRESENT IT WILL APPEAR ONCE IN TWO MONTHS.

**THE ANNUAL SUBSCRIPTION**

| | | |
|---|---|---|
| Island | Rs. | 6.00 |
| Foreign | | 9 sh. or 2 dollars |
| Malaya | | 6 dollars |
| Single Copy Re. | | 1.00 |

Subscriptions should be paid in advance.

*Please write to:*

**K. RAMACHANDRA.**

60, DEAL PLACE, COLOMBO—3

## சந்தா நேயர்களுக்கு

இன்றுவரை சந்தா அனுப்பாத நேயர்கள் பொங்கல் திருநாளுக்கு முன்னதாக சந்தாவை அனுப்பிவைக்க வேண்டுகின்றோம். **V. P.** மூலம் பெற விரும்புவோர் ஒரு கார்ட் மூலம் அறியத்தருக. விலாசமாற்றம் செய்வோர் சந்தா இலக்கம் பழைய விலாசம் புதிய விலாசம் என்பவற்றைத் தவறாது குறிப்பிடுக.

**ஆத்மஜோதி நிலையம்.** நாவலப்பிட்டி. [சிலோன்]

ஆயுள் சந்தா ஆதரவாளர்: **திரு. அ. இராமசாமி—மலாயா**

Hony. Editor, K. Ramachandra, 60, Deal Place, Colpetty
Printed & Published by N, Muthiah, Athmajothi Nilayam, Nawalapitiya
At Saravana Press, Nawalapitiya 16-12-55